14-03-2013 Dinamalar

# மண்ணடி வரை சுரங்க பாதை பணி வெற்றிகரமாக முடிந்தது



சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தில் நேற்று முடிவடைந்த வண்ணாரப்பேட்டை - மண்ணடி வரையிலான சுரங்க பாதையின் உள்தோற்றம்.

சென்னை, மார்ச் 14-

வண்ணாரப்பேட்டையிலிருந்து, மண்ணடி வரை மெட்ரோ ரயில் பாதை அமைக்கும் பணி நேற்று மாலை முடிந்தது.

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தில், வண்ணாரப்பேட்டையிலிருந்து மண்ணடி வரை, 1,350 மீ., துாரம் பாதை அமைக்கும் பணி, கடந்த ஜன., 10ம் தேதி, வண்ணாரப்பேட்டையில் துவங்கியது.

இந்த பணி நேற்று மாலை, மண்ணடி ரயில் நிலையம் வரை வெற்றிகரமாக முடிக்கப்பட்டது.

மெட்ரோ ரயில் திட்டத்தில், முதன் முதலில், இரண்டு நிலையங்களை இணைக்கும் வகையில் சுரங்க பாதை அமைக்கும் பணி முடிவடைந்துள்ளது.

மண்ணடி மெட்ரோ ரயில் நிலையம் அருகே, கடந்த 9 மற்றும் 10ம் தேதி இரவு, சுரங்க பாதை பணியின் போது, பிரகாசம் சாலையில் ஒரு ஓட்டலிலும், மீரான் லெப்பை தெருவில் ஐந்து வீடுகளிலும் விரிசல் ஏற்பட்டது.

பாதிக்கப்பட்ட கட்டடங்கள், மெட்ரோ ரயில் நிர்வாகம் மூலம் சீரமைக்கப்பட்டன. இந்த வீடுகளில் இருந்து பாதுகாப்பு கருதி வெளியேற்றப்பட்டோர், நேற்று முன்தினம் மாலையும், நேற்று காலையும் மீண்டும் வந்து சேர்ந்தனர்.